உ

சிவமயம்.

திருவரந்தாபரம்,

ஸ்ரீபொய்சொல்லா மெய்யர் ஆதிய

பதின்மூன்று ஆண்டவமார் ஸ்தோத்திர

# பலதிரட்டுப் பிரபந்தம்.

இஃது

வித்வான்

மகா-ா-ா-ஸ்ரீ முத்துவடுகே உபாத்தியாயரவர்களால்

இயற்றியது.

காளைமாநகரம்,

ராம. அரசப்ப பிள்ளையால்

மதுரை,

ஸ்ரீ மீனாம்பிகை அச்சியந்திர சாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

1924.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
26 JAN 1925
MADRAS

Q23:38.211TR
N24.
183484

உ

சிவமயம்.

ஸ்ரீ கணேசாய நம:

# முகவுரை.

திருவரந்தாபுரம், பொய்சொல்லாமெய்யர்
முதலிய பதின்மூன்று தேவர் தேவிகளின்

## பிரபந்தத் திரட்டு.

இஃது

இராமநாதபுரம் ஜில்லா, திருப்பத்தூர் தாலூகா, காளைமா நகரம் குலால சிகாமணியாகிய ஸ்ரீ சுந்தர உபாத்தியாயரவர்களால் இயற்றியது. பிற்காலத்து இப்பிரபந்தம் வரைந்துள்ள ஏட்டுப்பிரதி ஒன்றை ஷை காளைமா நகரம் வாசரும், தமிழ் அபிமானிகளுமாகிய வெ. முத்தரசு பிள்ளை, ராம. அரசப்ப பிள்ளை, இவ்விருவர்களும் பெற்று இந்நாலை பிற்காலத்து எழுதியோரால் எழுத்தாதி முதலியன பிறழ்ந்து அழகுகெட்டு ஓதற்கியலாதிருந்தலை நோக்கி ஷை தாலூகா சிங்கம்புணரி வித்வான் மகா-ள-ள-ஸ்ரீ முத்துவடுக உபாத்தியாயரவர்களைக் கொண்டு ஷை பிரபந்தத்துள்ள ஒவ்வொரு பாக்களையும் செவ்வனே திருத்தியும், அடிகளைப் புதிதாகச் செய்து சேர்த்தும் ஒப்பனை செய்து தருகச் செய்வித்துதவிய இப்பிரபந்தத்தை என்னால், மதுரை, ஸ்ரீ மீனாம்பிகை அச்சியந்திர சாலையில் பதிப்பிக்கப்பெற்றன.

இங்ஙனம்.

**ராம. அரசப்ப பிள்ளை,**

காளைமா நகரம்.

894·8/1101
3023

உ

சிவமயம்.

ஸ்ரீ கணேசாய நமஃ

இஃது

திருவரந்தாபுரம்;

# பொய்சொல்லா மெய்யர் ஆதிய தேவர்களின் ஸ்தோத்திர

# பலதிரட்டுப் பிரபந்தம்.

இஃது

## காப்பு விருத்தங்கள்.

சீர்பொருந்துந் திருவரந்தா புரமானச்
சிவதலங்கள் செழிக்கநாளும்
ஊர் பொருந்துங் கயற்றுண்மை நாட்டாற்று
நாச்சியம்மை யுயூர்சீர் பெற்று
தாங் பொருந்தும் பொய் சொல்லா மெய்யர்
தல்த்தனஞ் சயூன் சீர்த்தமிழ் சிறப்ப
கார் பொருந்து நிறக்கரிமா முகக்கடவு
ளிரு சரணங் காப்புத்தானே.

பேர் பொருந்து மூத்தணஞ் சையர்பாதம்
பிரியமுடன் றொழுது நலன்பெற வெந்நாளும்
ஏர்பொருந்தும்புலைமாடன் புலைச்சியம்மை
யிகன்மிகு வன்னியர்ராயனுஞ் சிறந்த
கார்பொருந்துமிருளப்பன் கருப்பணன் மீக்
கனங்கை பெறுந்தெய்வ முழுங்கருணை கூர்ந்து
சீர்பொருந்துஞ் சிருகுடி வேளாளர் வம்சம்
செழித்துயரும்படி கருணை செய்வர் தாமே.

வெற்றி வேலவனருளால் விழிகொடுத்துந்
தமிழ்கொடுத்தும் விரிந்த நெஞ்சப்
பத்திமிகுத் தயருமுத்து மாடனுக்கு
மேற்கதவுப்படிக்குவேண்டும்
முற்றியதோர் கோழி முட்டைக்காக
நடுக்காட்டிலையன் முன்னே பெண்கள்
சத்தியத்தில் வந்தகுல தேவதை தாண்
மலரை நிதஞ் சாற்றுவேனே.

இஃது

## முத்தணஞ்சய்யர் பேரில் ஆசிரிய விருத்தம்.

இந்தர லோகத்து மிதுபோற்பட்டதிலையென்ன
இழைநயமதாமின்னவும்
இருகரையுமுந்தியினு மேகண்டை போட்டதா
வீரைந்துமுள முள்ளதாய்
சிந்தை செய்தற்குவிலை மேற்பட்டதாரூப
சித்திரம் பலவுள்ளதாச்
செக்கச்சி வந்ததாக் காண்பவர் கணயனஞ்
சிமிட்டாது தேவரேய
அந்தமிகவே பெற்றதா வுள்ள சோமனின்
அடிமலர்த் துணைகள் பாடும்
அன்பருக்குதவியென்னடிமை யென்றுரிமைபா
ராட்டி வெண்ணீறுதவு மா
மந்த்ரகோலாகலா விந்த்ரர்தி தேவர்களும்
வல்லனென மெச்சு முதல்வா
மானிலத் தடியவர்கள் கலிதீர வருவோடும்
வளரணஞ் செயதேவனே.

மண்டலம் புகழு முத்தண்ட வாட்கரமுமரை
மலரென விளங்குமுகமும்
வன்னமிக்குயர் சந்த்ர காவியுரு மாலும்மலர்
மருவு பொற்குஞ் சிபழுகும்
எண்டிசை யினுயரியபுயா சலத்துணையின்மே
லிட்டவேகாச வெழிலும்

இடையிலுயருடையுமரை ஞாணும் மணிமுடிமுடியி
னேதூங்கு மாலே யழகும்
தண்டையொடுகிண்கிணி சிலம்பொடு மிலங்குமிரு
சரணத்தினெழிலு மொய்ப்பச்
சங்குதவில்தாரைபே ரிகைமுளக்கோடு நிர்த்
தனமாடுநின்சிறப்பைக்
கண்டிரு கணுங்களிப்பக்கருது நயனெலாங்
கைபெறக் கருணை புரிவாய்
கற்றுயரும் வித்துவசனர்க்கிருமை நயனுறக்
கருதணஞ் சயதேவனே.

இஃது

முத்தணஞ் சய்ய சாமிமேல் சொல்லிய கட்டளைகலிப்பா.

உன்னை நம்பினேனென்றடியார்கடாம்
உனது பாதமலர் தனையே நெஞ்சில்
நின்னயத்துடனே துதிசெய்திடில்
நெஞ்சமே லெட்டுயாம் புகுதுமோ
பன்னுசெந்தமிழ் தேர்ந்தருள் வன்னியன்
பாவலர் துதிசெய்யு முருகனே
டெங்கிலம்புகழ் தென்காஞ்சிமா நகர்
எய்திவாழ் முத்தணஞ்சய தேவனே.

தேசமெங்கும்புகழ் பொய்சொல்லா மெய்யர்
சித்தமெய்த்திடுந் தேவாதி தேவனே
நேசமின்றிச் செயுமடியேன்பிழை
நெஞ்சிடங்கொளா தாளுவதுன்கடன்
வாசமாமலர்சூடு புலேச்சியும்
மாடாத்திகண் ணுத்திமகிழ்வுறக்
காசினிபுகழ் தென்காஞ்சிமா நகர்
களிக்கவாழ் முத்தணஞ்சயதேவனே.

ஆதியர்கவளர் பொய்சொல்லா மெய்யர்
அனுதினமு நின்னன்பிறவாமலே
நீதமிக்கமன்னென நின்னொடு நேசம்
வைக்கவளர்கன யோகனே.

சாதியாகிய சந்தனங்கத்தூரி
தனிப்புழுகு சவாது பிறந்துதான்
திதிவாது மணக்குந் தென்காஞ்சியிற்
செழித்துவாழ் முத்தணஞ்சய தேவனே.

அன்னைதந்தை பிதாவென்பர் நீயலா
லவனிமேலடியேற் கிவண்வேறுண்டோ
உன்னிருபத நாயடியேன்றனக்கு வந்து
வந்துதந் தாண்டருள் செய்குவாய்
மன்னுயிர்க் கொருதா பரமாகிய வள்ளலாம்
பொய்சொல்லா மெய்யர் மெச்சுற
எங்கிலம் புகழ் தென்காஞ்சிமாநகர்
எய்திவாழ் முத்தணஞ்சய தேவனே.

இஃது

முத்தணஞ்சையர் பேரிற் பாடிய பதம்.

ஐயர் வாரார்        முத்தணஞ்        சையர் வாரார்

ஐயர் வாரார் துய்யகரிமீதில்—அவனிதனிலுள்ள
ஜனங்கள் வணங்கவே
செய்ய மாதவர்பொய்—சொல்லா மெய்யர்
சித்தமகிழ்ந்தருள் கத்தனெனு மணஞ்        (சையர்வாரார்)

சல்லடஞ் சோமனிடையினிற்கட்டித்—தம்பட்டமேளந்
தவிபலர் கொட்டி
வல்லவராட அவர்நடுவோங்கி—மாநிலமே
லழியாப் புகழ்தாங்கி        (ஐயர் வாரார்)

கையிற் பிடித்த செண்டாயுதமின்னக்—காலிற் சிலம்பு
கலகல வென்ன
மெய்யிற் புழுகு சவாது மணக்க—வேணதளித்தென்
மனதை யிணக்க
துய்ய தீவர்த்தி பகல்போ லெரியக்—ஜோதிக் குடைகண்
முடிமேல் விரிய
வெய்ய வெடியதிர் வேட்டொலிவான்—மேற்செல
வெண்ணறு கீர்த்திமானென.        (ஐயர் வாரார்)

திங்கள் வதனத்தரசு மகனெடு—செல்வனென்னு
மிருளப்பன் பண்டாரம்
சங்கை பெரும்புலை மாடன் வன்னியன்—தக்கபிழை
பொறுத்தானு முருகனும்
மங்கைபுலைமாடிமாடாத்தி பிராமணத்தி—மாத்திரஞ்சேர்ந்த
கண்ணாத்தி குட்டிமுத்தாள்,
மங்களஞ்சேர் கருப்பண்ண் ஞதிப்பரி—வாரதேவதைகள்
சூழ்ப்பரி மீதில் (ஐயர் வாரார்)

இ∴து

புலைமாடய்யர் பேரில் ஆசிரிய விருத்தம்.

திங்கள் நிகர்வதனமும் அரிவாளும் நற்கருணை
திகழ் நயனநெற்றியழகும்
செய்யவண்ணங் கொள்பட்டாடையழகுஞ் சென்னி
செறியுமுரு மாலினழகும்
தங்கப்பதைக்கனழகும் மார்பின்மேற் பிறளு
தாளமணி மாலையழகும்
தாங்கிரு புலைக்கத்தி பெறுகரத்தழகுமிரு
தாள்வீர தண்டையழகும்
புங்கமிகு சல்லடங்கச்சையழகும் மேற்
பொருந்து மணியோசை யழகும்
பொலிவல்ல வேட்டழகு மிருகுழைக் குண்டலப்
பூணினழகுந் தரணிமேற்
சங்கையறவேயடிமை கண்களிகூறவென்
றன்னெதிர் நீவருவதென்றோ
சகலரும்பணிய வாமுதவ வருதெய்வமே
சாமிபுலை மாடையனே.

இ∴து

புலைமாடையர் கட்டளைக் கலித்துறை.

காங்குசல்லடங் தொட்டதின் மேற்கச்சை
கட்டி நீண்டகரத்திற் புலைக்கத்தி
வாங்கியுக் ரப்புலைச்சி யென்பாளொடும்
வந்துவெங்கலி நோய்தவிழ்த்தாளுவாய்

தேங்கு புன்னை கதலி கரும்புடன்
செந்நெல்பூகம்பலா வெரீடு மாத்தரு
ஓங்கிநிற்குந் திருவரந்தாபுரம்
ஓங்கவாழ்புலை மாடகெம்பீரனே.

வந்தவல்பிணி சூனியமென்செயும்
வல்லி துட்டம் பைசாங்க ளென்செயும்
அந்தகன் விடுதூதர்கள் என் செய்வர்
அடிமை யென்றுனை நம்பிய தொண்டரை
சந்ததம் மொருபொய் சொலா மெய்யர்தன்
சந்நிதியிற் பிரபல தெய்வமாய்
விந்தை சேருந் திருவரந்தாபுரம்
மேவிவாழ் புலைமாட கெம்பீரனே.

பங்கயந் திகழ்வாவியுஞ் சோலையும்
பத்திமிக்க பரிவார தெய்வமும்
எங்குஞ் சூழவிலங்கு மணஞ்சயன்
இருத்யந்தனி லெய்தியயோகனே
திங்கள்போல வதனமு நூல்சொலுஞ்
சிற்றிடையும் பெறும்புலையுட்
புங்கமோடு மகிழ்ந்து கொண்டாடிய
புனிதனே புலைமாட கெம்பீரனே.

சிலைக்கிசைந்த புயவலிதன்னோடு தேயுமேற்
பலநீத்தொழில் கற்றுடன்
மலைக்கவுந்தன் அடியார்கடன்மனம்
வந்துதுன்ப மிடும்பேய்க டன்னையே
நிலைக்கடன் முகட்டே வரச்சூரியன்
நின்றதண்பனி நீங்கியவாறென
புலைக்காரக்கத்தி கண்டருண்டோடிடப்
போக்கிடும் புலைமாட கெம்பீரனே.

தொண்டனேனுனை நம்பித்தினந்தினம்
தூயபாதத் துணைமலர் சென்னிமேற்
கொண்டுளேன் குறைதீர்த் தெனையாளுவாய்
குற்ற நீக்கிக் குணங்கொளுங் கொற்றவா

மண்டலத்துரியா ருனையன்றிலே
மாதவா தமியேனுறை பொய்யிலே
விண்டலஞ் சொல்திருவரந்தாபுரம்
மேவி வாழ்புலேமாட கெம்பீரனே.

கானின்மேல் வந்தெதிருமிருகமும்
கடினமானபன் னுகத்தினஞ்சமும்
நானிலந் தனில்வந்தெதிர் நோய்களும்
நாதநின்னடியாரிடத் தெய்துமோ
தேனின் மிக்க மொழியாள் புலேச்சிமால்
தேக்கிவாழ்கின்ற செஞ்சிலே வீரனே
மானிலத்துயர் திருவாரந்தாபுரம் மருவி
வாழ்புலே மாட கெம்பீரனே.

விந்தையாவொரு தேரமைத் தேகடு
விளங்கவே கரும்பன்றியை மேல்வைத்து
வந்திடக்கண்டு தான்புலேக் கத்திகை
வாங்கியூன்றிப் பலிகொளுநாதனே
அந்தரம் புவியெங்கும் புகழுநின்
றன்பருக் கருளும் புலேமாடிதன்
சிந்தை மெய்த்த திருவரந்தாபுரம்
சேர்ந்து வாழ்புலே மாடகெம்பீரனே.

இஃது

புலேமாடையர் பேரில் கீர்த்தனம்.

சாமிவாரார் உல்லாசமாய்ச் சாமிவாரர்
சாமிவாரார் அணஞ்சயர் மெச்சிய—சண்டப்ரசண்ட
வுத்தண்டப் புலேமாட (சாமிவாரார்)

காங்குரு மாலும் பொற்குச்சுடன்—கண்ட சரங்கள்
கனத்தொடு
பாங்குயர் மார்பில் தரித்திடும்—புண்புயர் சோமன்
பரிவொடு
தூங்குமணிகள் இடையிற்—றுவண்டு நின்றுட
கவின்மிகத்

தாங்குகரத்தில் புலேக்கத்தி—தானிசைந்தாடத்
தயவுடன் (சாமிவாரார்)

சந்தனங்கந்த புழுகு—சவாது கதம்ப
மிகுந்தெழு
கந்தப்பொடிகள் திமிர்ந்துகம்—பீரமதாகப்
பெருமித,
சுந்தரஞ்சேரும் சந்திரகாவித்—துப்பட்டிப்போர்வை
துலங்கிட
விந்தையுதாக வடியவர்—மெய்ப்பதம் போற்ற
விளங்கிய (சாமிவாரார்)

ஐயர் தென்காஞ்சி வளரணஞ்—சையசொய்யார
அரசுடன்
மெய்யிருளப்பன் பண்டாரம்—விளங்கும்வனியன்
முருகனும்
செய்ய பிழைகள் பொறுத்தாளும்—தேவிபுலேச்சி
மாடாத்தியும்
துய்யகருப்பர் பரிவாரஞ்—சூழ்ந்தேயிலங்கப்
புலேமாட (சாமிவாரார்)

ஷ சுவாமி கீர்த்தனம் வேறு சந்தம்.

இந்தவேளே வந்து விளேயாடவேணும்—ஸாமி
என்றுயரந் தீரவரந் தரவேணும்.

செந்திருசேர் தென்றிரு வரந்தாப் புரத்தில்—வளர்
செல்வப்புலே மாடையாவுன் சித்தமகிழ்ந்தே. (இந்தவேளே)

கொண்டையின்மேற் காங்குருமாற்குச்சு மாடக் காதில்—குலுங்கு
முத்துக் கடுக்க னிசைந்தாட
வேண்டாள மாலிகை பொன் மார்பிலாடத்—தோளின்
மீது வல்லவேட்டு முல்லேமாலே யோடாட
செண்டு கரமீது புலேக்கத்தியாட—அரையிற்
சேர்த்த கச்சை மீதிலெழு மணியாட
புண்டரீகப் பாத வீர தண்டையாட—நின்று
போற்று மடியவர்கள் கும்பிடு போட. (இந்தவேளே)

சந்த்ர வதனத்தணி சிந்தூர மிலங்க—புழுகு
சந்தனஞ் சவாது பனீர் வாசம் விளங்க
சுந்தரப் புயமேற் பத்மமாலை துலங்கப்—பம்பை
துடிலவண்டை வில்லடி மணி முழங்க
விந்தையுடனு வேசம் வந்துடல் குலுக்கக்கயில்—வீசும்
புலைக்கத்திமுக மின்னி விளங்க
இந்த்ர சபைபோல வொளிராலையந்தனி—லுந்தன்
இருபாத மலரடியார்கள் வணங்க (இந்தவேளை)

தேசம் புகழுணஞ் சைய்ய சாமியாடச்—செல்வஞ்
செழிக்கு மரசனி ருளப்பனுட
வாசகனும் பண்டாரம் வன்னியனுட—முருகன்
மானிலத் தெம்பிழை தள்ளும் வள்ளலாட
காசினிவிளங்கும் புலைமாடியாட—மாடாத்தி
கண்ணுத்திகுட்டி முத்தாண் முன்னின்றுட
பூசனை கொண்மாப் பெரிய கருப்பாட—வுக்ரப்
புலைமாட சாமி யுந்தன் மனமகிழ்ந்தே (இந்தவேளை)

இஃது

புலைச்சியம்மன் பேரில் ஆசிரிய விருத்தம்.

தஞ்சமென்வுனை நம்புமடியார்கள் மேற்பல்பிணி
தங்காது வஞ்ச ரேவத்
தாட்டிகமதாகவரு மேவல்பிணி சூனியஞ்
சாராது தெய்வ வாசக்
கஞ்சனெழுதாழ் வலிதருந் தீமை பற்றுது
கருவு மிருகங்கள் பேய்கள்
காணி லணுகாது துர்க்கிரகங்கடரு
பெருங் கட்டம் வந்திறைபுகாது
செஞ்சொலவர் புகழரசு மகனிருளன் பண்டார
தேசிகன் புலைமாடன்மா
சித்தர்புகழ் முருகப்பன் வனியன் கருப்பன்மா
தேவிசொற்ப ராமணத்தி
மஞ்சனைய குழலிகண்ணுத்தி மாடாத் தியிவர்
மகிழ்வோடு சூழ்ந்திருப்ப

வாழ்வுறு புலைச்சியம் மேயடிமை யேனைமன
மறவாது காத்தருள்வையே.

இஃது

## புலை மாடியம்மன் விருத்தம்.

செல்வியுன் பாதார விந்தமலர் தன்னையென்
சிந்தையினினைக்க வேண்டும்
தோரார்க் ளேவவருபில்லி சூனியமெனைச்
சேராதிருக்க வேண்டும்
சல்லியஞ் செய்கின்ற துட்டப் பசாசங்கள்
சாராதிருக்கவேண்டும்
சதுமுகப் பிரமனெற் கிட்டதீ வினைகளைத்
தள்ளிநான் வாழவேண்டும்
வல்வினை ஞரெணிவிழைத்துறு துன்ப
மெந்தனை வருத்துறு தொழியவேண்டும்
வாரிநிகரப் பெருகி வருதாம் ப்ரவேணிநதி
வளமிக்க நெல்வேலி வாழ்
கல்விமிகு பொய்சொலா மெய்யர் சந்நிதியிற்
களிப்போடிருந்து வாழும்
கலிகால தெய்வமென வோங்குபுலை மாடீயான்
கருதியன தரவேண்டுமே.

இஃது

## மாடாத்தியம்மன் விருத்தம்.

செங்கமலவதனமுங் கொப்பிட்ட குழையுநற்
சிந்துரமதிட்ட நுதலும்
தேசவிழு முத்து மணிமாலை பொன்மாலையணி
சேர்மார்பு முடைய வெங்கள்
புங்கவியென மாடன் வன்னியன் முருகன்மிகை
பூமிசை பொறுத்தளிக்கும்
பூவைத்தபரை பிராமணத்தி கண்ணுத்தியும்
போதக் கருப்பண்ணரும்

சங்கையறவேநின்று தொழுதடி வணங்கநிகழ்
சரணி சரணாரவிந்தந்
தனக்கடிமை யாமடியர் கலிகவலை பிணிமுழுந்
தள்ளி நற்றிருவருள் செயும்
மங்களகுணேஸ்வரி யெனதுமுறை கேட்டிருமை
வளனுமுதவத் தகுந்த
வல்லவி தென்காஞ்சிநகர் புக்கிலங்கி வளர்
மாடாத்தி யென்னுமுமையே.

இஃது

புலேச்சியம்மன் கீர்த்தனம்.

என்முகத்தை நீ பாரம்மா—செய்பிழை பொறுத்
தென்முகத்தை நீ பாரம்மா.

தென்திரு வரந்தாபுர மேவிய தேவியே நீடும்—செல்வியே
வருத்துபன்னோய் புல்லியே மெலிந்து வாடும்—என்முகத்தை

மண்டையிடி ஜன்னி சுரம்
வாதம் விப்பிருதிகண்ட
மாலைவெட்டை சூடு குன்ம
வாயு வயிற்றுள்ளே கொண்டு
கெண்டை மேக சூலை குட்டம்
கீழ்மைதரு சோகைபாண்டுங்
கிட்டுமோ கிட்டாதோர் நாளும்
இட்டம் வைத்துனடிவேண்டும் (என்)

செய்பிழை கோடானு கோடி யாகினு முன்றன்
சித்தமேற் பொறுத்தெனை நாடி
வெய்யன செய்யாம லாள வேணுமெனக் குனையன்றி
வேறுசக்தி யேதுஞான வித்தகியே கிர்பை யொன்றி (என்)

பிள்ளைபிழை பெற்றவட்கேது சேடன்சுமகப்
பெற்றிடும் அம்புவி மீது
சள்ளை செய்திடும் என்பிணி தள்ளி யாண்டருள்வாய் நல்ல
தன்மையே மிகும் புலேச்சி யம்மையே வஞ்ச நன்றல (என்)

இஃது

## வில்லடிப் பாட்டு.

1 தேசம்புகழ் பொய் சொல்லா மெய்யர் சந்நிதியி ல்
செழிக்கு மாலையந்தனிற்—சிறக்குந் தேவதையி ல்
நேசமாகக் கும்புசேர்ந்தே வொன்று க
நேர்மை மிக்க முத்தனஞ் சயசா மி

2 சந்திரகாவி சல்லடந் தயவாக த்
தரித்ததன்மேற் றனிக்கச்சை தயங் க
கெந்திவாடை யொருகாத மெய்வீச க்
கிளருங் கச்சைமணி யோசைவிண்மூ ச

3 சாலவோங்கு முல்லை மாலைகளாட த்
தளமாலை முல்லைமாலை யோடா ட
மாலையோடு பொன்மாலைகளா ட
வந்து முத்தனஞ்சய சாமி நின்று ட

4 கொத்தலர்ந்த முல்லை நாவிகைகு டி
கொண்டு கன்னியர்களாடியே பாட த்
தித்தியூத மத்தள தாளங்கொட்ட ச்
சிறந்த வாணர் கவிமாலைகள் சூட் ட

5 சோதி முகத்தெழுதியிட்ட பொட்டிலங்க த்
துலங்கு மார்பினிற் பொற்பூ ணூலதிலங் க
வாதுபேசிய பைசாசங்களோ ட
வல்ல அரசப்பனு மகிழ்ந்து நின்று ட

6 தாருலாவ மணிக்குழை துவண்டாட ச்
சரணமேற் சிலம்பு—தண்டைகளா ட
சீருலாவு வில்லடி முகந்தனி லே
சிறக்கு மிருளப்பன் ஆடி கின்றன னே

7 விந்தையான கரமீதில் மாத்திரைக்கோ ல்
விளங்கொட்டியானம் விபூதிப்பையிலங் க
சந்தனம் புனுகு கமழு மெய்துலங் கத்
தாவில்பண்டாரச் சாமி யாடினா ரே

8 காங்கு சல்லந்தொட்டுக் கருங்கச்சை யிருக்கி க்
கையிற் புலைக்கத்தி கட்டாரியு மேந் தி
வேங்கைபோலச் சீறி வீரப்ரதா ப
மேவிப் புலையனும் வின்முகத்து வந்தன ரே

9 சந்திரகாவியுருமால் சிரத்திலங்க ச்
சல்லடஞ் சல்லடமேற் கச்சை துலங் க
விந்தை பதத்தின் மணிச்சிலம் பொலிதளங் க
வின்முகத் துப்புலை மாடையர் வந்தா ர்

10 பாரினன்கு கானிருத்தி யாகாச ப்
பந்தர மைத்ததன் மேலுண் மையா க
வாரிப் பன்றியை நிறுத்தி மெய்ம்மே வ
மார்பைப் பிளந்து பெலிவாங்கிக் கொண்டேதா ன்

11 அலறியாக் ரமித்துக் குலவையிட் டோங் கி
யாடிப்பாடி வளைதடி கையில் வாங் கி
மலரின் மாலையிரு புயமிசைத் தாங்கி 0
வன்னியன் வின்முகந் தன்னில் வந்தன னே

12 அதிரு மேள வொலி விண்முகத்தோ ட
அணிந்தவரையின் கச்சைமணி யொத்துக்கூ ட
பதியிலுயர்ந்த வில்லடி முகந்தனிலே ல
பண்புடன் முருகப்பன் பயின்று நின்றன னே

13 சந்திரகாவி யுருமால் சிரஞ் சிறக்க த்
தரித்த சந்தன மணநாற் புரம்பாக் க
பைந்தமிழ்ப் படித்திட வின்முகந்தனிலே ல
பாரிற் பீழை பொறுத்தானும் வந்தன னே

14 பொங்கமான குழைக் கொப்புக ளாட ப்
புனைந்த பூத்தொழிற் பொலி துயிலா ட
திங்கள் வதனன் புலைமாடைய னுடனே ன
தேவிபுலை மாடியுஞ் சேர்ந்து வந்தன ரே

15 முத்துமாலையும் பதைக்கனுமா ட
முல்லைமல்லிகை மலர் மாலை களா ட்
சித்திரமான வன்ய ராயனுங் கூட த்
தேவிமுத்துவீ ராகி வந்தனே ள

16 தங்கப் பணிகளாடக் கைவளை கலிக்க த்
தாங்குஞ் சிறுமருங்குற்று கிலொளி சொலிக் க
பங்கய மேற் பீலிமயிலடி மின்ன ப்
பாரிலுயருங் குட்டிமுத்து வந்தன ளே

17 சந்திர காவிக்குச் சுருமால் துலங்க ச்
சல்லடமேற் கருங்கச்சை யொத்திலங் க
பொந்தயக் கோலரிவாளுங் கைப்பிடித்து ப்
புகழும் பெரியகருப் பணரும் வந்தனரே ர

18 ஒத்த வாத்திய வொலியிடிபோ ல
ஒலிக்கமா நிலத்தோர் துதிசா ல
சுற்றெலாங் குலவை வாழ்த்தொலி சிறக்க ச்
சுருக்குடன பெரிய கருப்பணரா ட

19 பந்தி பந்தி யாப்படை மன்னர் வருக ப்
பரிவொடு புலிமாடன் பக்கத்தில் வருக த்
சொந்தமாக வன்னி ராயனும் வரு க
துடிசேர் முருகப்பன் துணையாக வரு க

20 நன்ன நாவெனவே வின்முகந்தே டி
நாட்டமிக்க வன்னி ராயனும் வரு க
கன்னியான கம்மாளிச் சிவரு கக்
கண்டுமனமகிழ்ந்து பண்டாரம் வரு க

21 பொங்கமான பலபூடணம் பூட் டி
பூமாலை யொடு பொன் மாலைகள் கூட் டி
செங்கடா யின்பலி கொண்டழகாக த்
தேறி முத்தணஞ் சைய ராடின ரே

இஃது

## வன்னிய ராயர் பேரில் கீர்த்தனம்.

வந்தார் வந்தார் வன்னிய ராயர்—வந்தார் வந்தார்

வந்தார் தென்காஞ்சி மாநகர் மேவிய
மங்கை கண்ணூரப்பெண் பங்கில மர்ந்தருள்
சுந்தரச் சோபனன் மந்திர மிக்கதோர்
துட்டர்டங்கவே சட்டமதாகவே (வந்தார்)

நன்னயஞ் சேருங்கண் ணாரப்பெண்ணினலம்
நாம் மனதுவந்து கூடியிருவரு மாய்த்
தென்னையடியிருந்து சேர்ந்துசை யோகமாச்
தேவை யானதினான் மனமகிழ்ந்து

பூவை சொன்னதினாற் றிருடும் போது
தன்மையி லாரெனக் கண்ட கர்வலர்கள்
சட்டமுடன் பிடித்துக் கட்டிக்கொண்டுவர
இந்நிலம் புகழ்மங்கை தன்னைக் கைகயில்பிடித்
திழுத்துக்கிணற்றிற்பாய்ந்த அழுத்தமுள்ள வீரன்( வந்)

சந்திர காவியுருமால் குச்சுக் கொண்டைமேற்
றளதளென விலங்கச் சாந்து நெற்றியின் மின்ன
சுந்தரஞ்சேர் மார்பிற் சோமன் வல்லவேட்டுந்
துவளச்சல்லடங் கச்சை சுரிகையோடு கட்டி

சோடினை மிக்க ஆலையப் பொன்னின்
ஆடவர் மெய்க்கக் கவினர
விந்தத்திருப் பதத்தில் வீரதண்டை பேசி
விளங்க புழுகு சந்தம் மெய்ம்மணக்கப் பூசி
சிந்தையு வந்தடியார்க ளடிபோற்ற
தேவிமுத்து வீராயியம்மனுடன் (வந்தார்)

பங்கயத்தாளன் அணஞ்சயன் அரசுடன்
பண்புசேரிருளப்பன் பண்டாரம் புலைமாடன்
சங்கையிலாப்புகழ் முருகன் பிழை பொறுத்தான்
தழைக்கும் புலைச்சிபிரா மணத்தியை கைகூட்டித்

தாளிணையைச்சூழ அடியவர்
தங்குலமே நீள் தலத்துயர்
துங்கன் பெரியகருப் பண்ணன் பரிவாரங்கள்
துலங்கு மர்லையமிக விலங்கக் குலம்விளங்க
அங்கை துலங்கத்துங்க வளரி யெடுத்தருந்தாம்
அரக்கு வெறியுடனே—சிறக்கும் வன்னியராயர் (வந்)

இஃது

## கருப்பணஸ்வாமி ஆசிரிய விருத்தம்.

1. கார்கொண்ட மேகநிற மேனியும் வதனமுங்
கருணைபொழி விழியினழகும்
கத்தூரிபுழு கொழுகு நெற்றியும் மரகதக்
கல்லொளி செய்ம்மகுட முடியும்
சீர்கொண்ட வங்கி சமுதாடு மேன்மின்னுறச்
சேர்த்தசல்லட மருங்கும்
திகழ்முத்து மாலையொடு சந்தனகதம்பந்
திமிர்ந்த திருமார்பி னழகும்
வீர்கொண்ட சோமனிடு வல்லவேட்டுஞ் சரண்
மீதிட்ட பொற்றண்டையும்
மின்னுற விளங்குநின் சமுகத்தடைந்து குறை
விள்ளுமடியார்க் கிரங்கிப்
பேர்கொண்டி ரக்ஷித்து வேண்டுவ வெலாந்தரப்
பெற்றிடுகுணாள னென்னப்
பிரபலமதாகக் களஞ்சியந் தன்னில்வளர்
பெரியகருப்பண சுவாமியே

2. வந்துன்ன தாலயந் தனினின்று நின்பாத
மலரடி வணங்கி யென்றன்
மனக்கவலை தீர்க்கவரவேணு மென்றவர் கண்மேல்
வாஞ்சை வைத்தருள் விழைந்து
சந்தான பாக்கியந் தந்து நங்குடிநீவிர்
தானெனவெ ணீறளித்துத்
தள்ளரியதான முப்பேரு கொண்டோங்கி வளர்
தாட்டீக கோலாகலா
சொந்தமிற்காமடிமை யேனிலத்திப் பெருந்
துன்புறு தனீதியாமோ
துட்டப்பசாச சம்மாரனே யதிவீர
சூரதீரப்ர தாபா
பிந்தாத பொந்தயக்கோல் கொண்டகையனே
பேறுபெரிதாக் கொண்டுநீள்
பிரபலமதாகக் களஞ்சியந் தன்னில்வளர்
பெரியகருப்பண சுவாமியே

3. கருமை நிறமேகொண்டு கால்கொண்ட மாப்பெருங்
கதிகொண்டு கலைகொண்டு
ககனவரை கிடுகிடென வேலையோ ரேழுங்
கலங்கிமீச் சேறதாக
வருதல்கண் டொளிதிட்ட பூதவேதாளர்கள்
மன்னர்முடி மீதுகால்கள்
வைத்து நடமிடு வீரவாம்பரியின் மேற்கொண்டு
வந்தெனிடர் தீர்த்தருளுவாய்
திருமங்கை செங்கண்மான் மகிழ் மைந்தனே தேவ
தேவனே தேடிவந்து
சேவிக்கு மடியர்வேணடுவ வெல்லாந் தந்துகாத்
திடவந் திலங்கு பரனே
பெருநிலத் துன்னைமறவாது பூஜிக்குமென்
பிணிதீர்த்தி ரக்ஷியையா
பிரபலமதாகக் களஞ்சியந் தன்னில்வளர்
பெரிய கருப்பண சுவாமியே.

4. (1) சீர்மேவவளர் திருநெல்வேலி யங்காமேவு
செல்வர்பொய் சொலா மெய்யர்தம்
சிந்தைகொள ணஞ்சயன் அரசுமக னிருளப்பன்
தெய்வீக பண்டாரமும்
பார்மேவு புலமாடன் வன்னியுன் முருகயன்
பகர்ரிய பிழை பொறுத்தான்
பன்னுதமிழுக்குதவு புலமாடி மாடாத்தி
பகர்பிராமணீகணுத்தி
பேர்மேவு குட்டிமுத்தா ளெனும்பதின் மூன்று
பெயர்கொண்ட குலதெய்வமும்
பிரபலமதாகவே நின்னோடு சேகரம்
பெற்றெவரு மொன்றதாகத்
தார்மேவு மெங்கள்குல தெய்வமா நின்றரு
டழைத்தோங்கு முதிவீரனே
தரணிதனில் வெகுகோடி பெயர்கொண்டு குடிகொண்டு
தாசர்தமை ரெக்ஷிப்பவா

(2) ஏர்மேவ நீசிற்குகிலே யீதலாமனும்
இன்னுமிலே பலவுண்டுமால்
யாதுயாதெனிலையனே யேழை தேர்ந்தள
விசைப்பே னுரங்காப்புளி
ஆர்மேவு புத்தூரு கொத்தளங் குலேகொல்லி
யருள்பேறை மாம்பூண்டியூர்
அதிசெயம்பூர் கொடுங்கிரி மருவுவயிரவரின்
அழகேறு சகிதி சந்தத்
தேர்மேவு பச்சைமா நகர மமராபதி
சிக்கந்தர் தங்கிய மலே
சித்தர்மலே பொதிகைபழ முதிர்சோலேமலேவளஞ்
சேர்கரந்த மலேவன்ன
வார்மேவு கொங்கையங் கன்னிமார் மலேபழநி
மலேகோடி மலேகண் முதலா
மலேயாள மலேவாழும் வல்லடிக்காரனுட
மாப் பெருஞ் சந்நிதியினும்

(3) கார்மேவு கிந்தமலே பொக்கிஷம்
மானக்களஞ்சி யந்தனினு முரிய
காசினியிலுள்ள பலதலமெலா மன்போடு
கலந்துபுகழ் பெற்றவனுநீ
சீர்மேவு முந்தனுட் பாதார விந்தமென்
சித்தம்விட் டகல்வதுண்டோ
தேயமதினின் னடித்தொண்டர் பலகோடியுட்
சேயனு னொருவனன்றோ
பேர்மேவ வருள்புரிதி பொய்சொலா மெய்யர்தம்
பிரபலச்சநிதி மேற்சீர்
பெற்றுமாதவர்பலர் துதிக்கவளர் மெய்யனே
பெரிய கருப்பண சுவாமியே

இஃது

பெரிய கருப்பண ஸ்வாமி பேரில் கீர்த்தனம்.

சாமிவாரார் கருப்பண—சாமிவாரார்

சாமிவாரார் வருணப் பரியேறிச்
சகலபரிவார தேவர்கள் சூழவே
பூமி புகழவே பொய்சொல்லா மெய்யர்
புகலடியவர் குடிகள் காக்கவே (சாமிவாரார்)

காங்குக் கச்சையுஞ் சல்லடஞ் சோமனும்
கன்கம்போற் சந்திர காவி யுருமாலும்
பாங்குயர் மார்பில் உல்லாச வல்லவேட்டும்
பாதத் தணிவீர தண்டை சங்கிலியும்
ஓங்கக் கரமிசை வீச்சரி வாளும்
ஒளிதர வெண்முத்து மாலிகையு மின்ன
தீங்கற நோய்கலி துன்பிணைத்தீர்க்கவே
தேய மதிலடி யார்குடி காக்கவே (சாமிவாரார்)

வங்கி கொடுமரம் சக்கரந் தோமரம்
வல்லய மீட்டி கழுமுள் ளெழுக்களும்
புங்கமாகிய பொந்தயக் கோலும்
போர்க்கியல் பெங்க ளூர்ச்சமுதாடும்
திங்கள் போலவி லங்கு வதனத்
திலகமும் முத்துக் கடுக்கனு மின்னவே
மங்கல னாங்கருப்பண்ணர் பொன்னேர்க்கவே
மாநில மேலடியார் குடிகாக்கவே (சாமிவாரார்)

துட்டர்கள் கொட்டமடக் குமணஞ் சயன்
துடி சேரிருளப்பன் அரசு மகனொடு
இட்டமிக்க பண்டாரம் புலைமாடன்
இசைவு பெறுகின்ற வன்னியராயன்
கட்டழ கேய புலைச்சி மாடாத்தி
கண்ணாத்தி குட்டி முத்தாண் மகிழவே
அட்டதிக் கரசரையு மற்றோரையும்
அருமை கொண்டாளும் பெருமை கருப்பண (சாமி)

ஆலையமான் தென் காஞ்சி நகர்வளர்
ஐயனா முத்தணஞ் சையன் அரசுமகன்
பால்மொழி யிருளப்பன் பண்டாரம் புலைமாடன்
பன்னு தமிழ்த் தேறும் வன்னியன் முருகனும்

வாலே யெனும் புலேமாடி மாடாத்தி
வளரும் ப்ராமணத்தி குட்டி முத்தாளும்
ஞாலப் பிழைபொறுத் தானும் பதின் மூன்று
நற்றே வருமன்பு பற்றிச் சூழ்ந்துவர (சாமிவாரார்)

இஃது

புலேமாட சாமி பேரில் ஆனந்தக் களிப்பு.

1. திருவளஞ் சேர் நெல்வேலி மேவும் எங்கள்
செல்விபுலே மாடய்ய சாமிதன்பேரி ல்
மருமருவு தாரணியின் மீதே சந்தம்
வழுவா மலானந்தக் களிப்பையான் பா ட
பெருவளஞ்சேர் பொய் சோலலா மெய்யர் வாயற்
பிரதானியான வுத்தண்ட கெம்பீர ன்
தருமலர் வேயணஞ் சைய்ய சாமி திவ்ய
சரண தாமரை மலரை நிதமு மறவேனே

2. கன்னன் மிகுதென் காஞ்சி மேவும் சர்வ
காரணன் புலேமாட தீரவேண்மீ து
நன்னயம் பெருக வானந்தக் களிப்பை
நான்கூற வரசுமக னிருளப்பனே டு
சொன்னவில வல்லி பண்டாரம் வல்லவ
துரை முருகனடியார்கள் பிழை பொறுந்தானு ம்
அன்னமன புலேச்சி மாடாத்தி யிவர்கள்
அடிமலரை யடிமையேன் முடியின்மேற் கொள்வா ம்

3. கொங்கு வங்காள காம்போசம் டில்லி
குட்குமகதங் கொச்சி மலேயாள தேச ம்
எங்கும் வளர் புலேமாட சாமி மீதில்
இன்பமிகு மானந்தக் களிப்பை யான்பா ட
செங்கண்மால் விடையன் மான் மைந்தன் மகிழு
தீரனதி வீரனிகல் தீரவெதிர் சூர ன்
புங்கமிகு தென்காந்தை மேவும் பரி
பூரணகருப்பணன் பாதமறவே னே

4 இந்தேறு வதனமட மானே எந்தன்
இட்டமொழி கேளுனக்கே சொல்லுவேனே
சிந்தூர வதனவெழி லாட வலது
செங்கை தனிலே புலிக்கத்தி யொளிகூட
சந்தமிகு சொன்னச் சிலம்பு வீர
தண்டை மணிகலகலெனு மொலிவிண் ணிலோட
மந்திரசேர் புலிமாட சாமி மும்மை
மதகரிமேல் வரும்பவனி பார்க்கவா பெண்ணே

5. வட்ட வெண்குடை விண்வெளி மூட தாள
மத்தளத்திற் கிசையவே பாணர்பாட
இட்ட பேரிகை பம்பை கொட்ட கொட்ட
வெழு மோசையா காய்வெளி முற்றும் முட்ட
அட்டமங்கலமாத ரெடுக்க திக்கை
ஆளரசர் காணிக்கை கொடுவந் தடுக்க
சட்டமிகு புலிமாட சாமி பவனி
தான் வருகிறார் பார்க்க நீவருவாய் மானே

6. வெண்டாள மாலிகை யிலங்கக் காதில்
மேன்முருகும் மார்பிற் பதைக்கனுந் துலங்க
செண்டுகரமே லொளி விரிக்கக் கண்டை
சேர்த்திட்ட காங்குரும்ாற் குஞ்சஞ் சிரிக்க
எண்டிசையோர் நின்றடி வணங்க மாதர்
இருபுரமு நின்றுபுரி நடன மதிணங்க
தண்டிகையின் மேன்மகிழ்ந் தேறி நமது
சாமி புலிமாடையர் வருவது பார்மினே

7. வேதங்கண் மறையவர் படிக்கக் கற்றக
வித்வசனர் வித்தா ரமுத்தமிழ் உரைக்க
நாத கீதத்தி னொலி மிஞ்சப் பூாத
நளின வடியார்களுட கூட்டங்கள் விஞ்ச
பேதகமிலர்து குடிகாக்கும் [illegible]கற்
பிரதானி கருப்பண்ணர் முன்னே நடக்க
பூத வாகனத்தின் மீதேறி நமது
புலிமாடர் பவனிவரும் நிலைபாராய் மினேனே

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
183484
சென்னை 600 008
23/38/2/117R

8. சந்தன சவாது மணம் வீச முல்லைத்
தாம மல்லிகை மாலைமேல் வண்டுமூ ச
விந்தைமிகு பகல்வர்த்தி யெரிய வான
வெடிகுண்டு வெடியோ டதிர்வேட் டோசை விரி ய
பந்தி பந்தியாச் சேனையானை குதிரை
படை பரவிவருக வெழு தூண்மூடவா னை
சந்தமிகு பூச்சப் ரமேறி நமது
சாமி புலைமாடர் வருபவனி பார்மின் னே

9. அத்திர விழியரம் பையர்களாட ஆடும்
அமைவினுக் கேற்பவே விறலியர்கள் பா ட
பத்தர் கூட்டங்கடுதி படிக்க விரண்டு
பக்கத்தும் வீரர்பல கொடிட்டால் பிடிக் க
சித்திரமிகு பூந்தேர் சமைத்து சமைத்த
தேரினடு வேபன்றி போலுருவமைத் து
பெற்றமிகு புலைமாட சாமி பன்றிப்
பெலி கொள்ள வருகின்ற வலிமைபார் மின் னே

10. பகடேறு நமனு மெய்ந்நடுங்க வல்ல
பைசா சபூதகண மெல்லா மொடுங் க
மகுடேசர் கைகுட்டி நிற்கத் தொண்டர்
வரம்வேண்டி நந்தேவ னிருபாலு மொய்க் க
விகட மதகரிகண் முனடக்க அச்சம்
மிஞ்சியே பகை மன்னர் தன்னூர் கட க்
தகிடதிமி யெனவாடு நடனக் குதிரை
தனிலேறிப் புலைமாடர் வருவது பார்மின் னே

11. பில்லி சூனிய வலிகள் நீங்க அருட்டு
பேய் ஜடா முனிகளிருப் பிடம்விட்டுத் தேங்க
வல்லபல பிணிகலிக டுஞ்ச நித்தம்
மீறவாது தொழுமடியர் குடிவாழ்வு மிஞ் ச
செல்வப்புலை மாடிமகிழ் நாதன் நாளும்
திருவாந்தா புரந்தனில் வாழுநீத ன்
சொல்லிரண் டுரையாத வாயான் நல்ல
துரையான புலைமாடன் பவனிபார்மின் னே

12 தாணுதி யென்றிடு நெல்வேலி மேவித்
தழைத்தருளும் பொய்சொல்லா மெய்யர் சந்நிதியி ல்
நாணுதியென்னு மணஞ்சயனும் தெய்வ
ராஜனெனு மரசப்பனிருளன் பண்டார ம்
பூணுதியிலங்கு வன்னியனும் முருகன்
புரை பொறுத்தான் கன்னி புலைச்சி புலை சூ ழ
ஏணுதிகுலதிலகர் பணியப் பவனி
எழுந்தருளிப் புலைமாடர் வருவது பார்மின் னே

13 அந்திவீரன் சந்திக்கருப்பன் இருட்டில்
ஆகாயத்தெறி சோத்துக்காரன் முப்புளியா ன்
சந்திவீரன் செக்கடியான் வாசற்
சந்யாசி மலையாண்டி ஊருகாவலனு ம்
பந்திபெற்றிரு புறமுஞ் சூழ மற்ற்
பரிவார தேவதை கணின்றடிமேல் வீழ
விந்தைமிகு புலைமாட சாமி பவனி
மேல்வருதல் கண்டு சுகமேவுவாய் பெண் ணே

14 வண்டாடு கூந்தன்மட மாதே வீதி
வாய்வரும் புலைமாடன் 'பவனியிப்போ தே
கண்டாருக் கேதிகத்துன்பு நெஞ்சக்
கவலைதீர்ந்தெய்து முயர்பாக்கியத்தின் பு
அண்டாத் தட்டப்பசாசம் வெய்ய
தான பிணிபோய்ப் பெறுந்தேகம் ப்ரகாச ம்
மிண்டான கிரகங்களேறு நா
வேறணுகுருதையம் விட்டு நீதே று

15 பெண்ணே நாமெண்ணிய கைகூடும் கும்
பிட்டுவேண்டிக் கொணம்பலகை முற்றும் வீடும்
உண்ணேசர் மேலன்பு மிக்கான் பணிதி
யொருநாளு நம்மை யெட்டுன்பத்துள் வைக்கா ன்
கண்ணாலே காண்பவருக்கில்லை நேருந்
கலிகவலை பிணியாதியான பெருந்தொல் லை
பண்ணேறு மொழியாளே வருவாய் புத்ர
பாக்கியமும் பெருவாழ்வுங் கைமேலே பெறுவாய்

16 பந்தணைய கொங்கை யங்கோதாய்வந் து
பாரு புலைமாடையன் சந்நிதியின் சீ ரை
சந்தான வரங்கேட்ப ரொருபால் செல்வந்
தரவேண்டுமென்று நீரேந்துவா ரொருபா ல்
வந்தவினை தீரென்ப ரொருபால் மகுட
மன்னர் பலரேவல் கேட்டே நிற்பதொருபா ல்
விந்தைபெறு காணிக்கை கொண்டு குடிகள்
விளங்கவே முன்வைத்துக் கும்பிடுவ தொருபா ல்

17 செங்கடாய்ப்பலி கொள்வதொருபால் திறமை
சேர்பல நிறக்கடாய் சூலாடு சேவ ல்
மங்குனிறமான தோர்பன்றி கொண்டு
வந்துபலியிட்டு நின்றேற்று வாரொருபா ல்
எங்கள்குல தெய்வமே யென்று சென்னி
யிற்கைவைத்தே தங்கள்குறை சொல்லி நின் று
புங்கமொடு போற்றுவா ரொருபால் கண்டு
புலைமாடர் வெண்ணீறு பெறுபவர்க ளொருபா ல்

18 கண்டாயோ வென்னாசை மானே நங்
கடவுளாம் புலைமாடன் பெருமையைத்தா னே
பண்டுசெய் பாவங்க ளறவே நமது
பரமனும் புலைமாடர் வெண்ணீறு பெற வே
வண்டாடு கண்மயிலே நீவா வந்து
வாங்கி வெண்ணீறிட்டுக் கொண்டெங்கடே வா
செண்டாயுதா வென்று விள்வாய் அன்பு
செய்தெமைக்கா வென்று கும்பிட்டுக் கொள்வா ய்

19 வேதமறையோர் வேதம் வாழி பாரில்
விச்வசனர் சிறுகுடிவாழ் வேளாளர் வா ழி
பூதலமதாண் மன்னர் வாழி யிந்தப்
புவிமீதின் மாதமும்மாரி பெய்வா ழி
மாதவன்சேய னெனவந்து பூவில்
வாழ்ந்தருளும் பொய்சொலா மெய்யர்தாள்வா ழி
சோதிமிகு புலைமாடசாமி கோவில்
சுகமாக நீடூழி வாழ்கவே வாழி

ஆனந்தக் களிப்பு முற்றிற்று.

இஃது

## கருப்பண ஸ்வாமி பேரில் ஆனந்தக் களிப்பு

1. கார்கொண்ட கருப்பண ஸ்வாமி மீது
கனிவோடு மானந்தக் களிப்பை யான்பா ட
தார்கொண்ட பஞ்சக்கரத்தோன் விகட
தந்திமா முகவனிரு சரணமலர் துணை யே

2. திங்களணி செஞ்சடா மகுடன் உமா
தேவிகுமரேச னிருதாண் மலர்கள் சரண ம்
மங்கள மிகுந்திருக் கண்ணங் குடிமேல்
வளரு நயினார் பாதவனசமலர் சரண ம்

3. சோலைமலை மாதவன் சரணம் நல்ல
துலக்குடியில் வாழரையர் துணைத்தாள்கள் சரண ம்
நீலமலை வேதனே சரணம் என்று
நித்தனாகிய சேவக மூர்த்தி சரண ம்

4. காலவயிரவ மூர்த்திசரணம் ஞான
கத்தனெனவளர் வீரபத்திரனே சரண ம்
வால பாரதியே நின்சரணம் வீர
வடபத்திர காளிநின் சேவடிகள் சரணம்

5. பொன்னுரு மலர் தனு மூர்த்தி நல்ல
புதுக்கருப்பனே தேவதேவநின் சரண ம்
மன்னர்மகிழ் பெரியகருப்பையா என்னுள்
வளர்சோணையா சமையக் கருப்பணனே சரணம்

6. முனியன்ன சாமியே சரணம் சொர்ன
முத்துக்கருப்பண முன்னோடி சரண ம்
பனிமலர்த் தாமனெனு மெங்கள் கருப்
பண்ணர் மேலானந்தக் களிப்பை யான் பாட

7. பந்திசூழ் தெய்வங்கள் சரணம் சித்தப்
பாங்கான வரமருளப் பையர்தாள் சரணம்
கந்தம்விழை ரிஷி கன்னிமாரே காணக்
காக்ஷிதரு பேச்சிராக் காட்சியே சரணம்

8. வளமான வழகர்சந் நிதியான் நாளும்
வாழ்வான பதினெட்டாம் படிமேவு பதியா ன்
அழகேறு கருப்பண ஸ்வாமி மீதி
லன்போடு மானந்தக் களிப்பை யான் பாட

9. எடெழுத்தாணி சிந்தாமல் அடிமை
யேனறிவு தமிழுணர்வி லெள்ளும் பிந்தாம ல்
பாடவருள் தக்ஷிணா மூர்த்தி பாத
பங்கயத் துணையை மறவாது துதிசெய்வா ம்

10. வேண்டி நின்றேற்று மடியார்கள் நெஞ்சில்
வீற்றிருந்தினிய குடிகாத்து வாழ்வுதவு ம்
ஆண்டவன் கருப்பண்ணர் தன்னே ருணர
அறைகுவேன் கேட்டருளுவா யெந்தன்மின் னே

11 கொல்லிமலை கொச்சிமலை டில்லி 'மானக்
கொங்குமலை முதலான மலையுமவன் காவல்
சொல்லினுயர் பதினெட்டாம் படியான் மருவு
சோலைமலை முதலான மலையுமவன் காவல்

12 எழ்கடற் றுறைகாத்த தேசன் உலகர்
இட்டேற்று திவ்வியச் சாம்பிராணிவாச ன்
வாழ்வுலகிலே மிக்கதுடியான் நல்ல
வரதர் சேவக ராயர் மருவுதுலைக் குடியா ன்

13 இளையாத்தக் குடிப்பெத்தப் பெருமாள் கோவில்
எந்நாளும் நிலைபெற்ற கண்ணுனை தேவ ன்
அழகுற்ற சிங்கம்புணரி மேவு ம்
ஐயர் சேவகரென்னும் மெய்யர் சந்நிதியி ல்

14 அங்கமுறவே மிக்ககீர்த்தியுல க
ம்த்தனையுமெய்தவே வாழ்கின்ற மூர்த் தி
சங்குசக்கிரபாணியேவன் முழுது ந்
தப்பாதியற்றிவரும் வல்லனுந்தேவ ன்

15 தீனர்களை யாண்டருள் கோதண்டன் துட் ட
தெய்வப்பசாசங்களைச் சீறுமுண்ட ன்
தானவனுமானவளகேசன் அன் பர்
தன்னிடமிருந்துவளர் கீர்த்திப்ர தா பன்

16 ஆர்க்காடு மேலமலையாளம் முதலா ம்
ஐம்பத்தாறு தேசங் காவல்கொளுந்தோளா ன்
தீர்க்கமுள்ள சீரங்கராமர் கோவி ல்
செகநாத முதற்காவல் செய்கின்ற தேவ ன்

17 சேதுபுகழ்மிகு கும்பகோணம் தா ய்
தில்லைநகம் பெருமானுற் காவல்புரி தான ங்
சீகிலாப் பழநிபரங்கிரியும் வே டர்
திகழ்வெள்ளிமலை சீர்த்திகேசா பரான் மலையு ம்

18 மருத்து மாமலை கைலை மலையும் சொக் கர்
மதுரை நகர்க் கோட்டையு மெம்மை யனுடகர் வல்
திருத்தமிகு தீர்த்தங்கள் காவல் எட்டுத்
திசைத்துறையும் பதினெட்டாம் படித்துறையுங் காவல்

19 வளர்சோம கிரியிட பகிரியும் துங்க
மலைபொதிகை மலைநாக மலைபவழ மலையு ம்
அழகர் சந்நிதி சோலைமலையும் தீர்த்த
மருவியுநம் கருப்பைய னுடகாவ ல்

20 தொட்டியப் பேய்கள் குருபீடம் பில்லி
சூனியத் தெய்திடுந் துயர்தீர்க்குந் தெய்வ ம்
கட்டினி லடங்காத காளை பெரிய
கம்பந்தனிற் சேர்த்துக் கட்டாதகா ளை

21 கொட்டமிகுந் தவகையின் கன்று மிக்க
கொடியுடைமேல சிந்து கடியவிடியே று
நெட்டுலகு புகழுபொலியெருதே யென்ன
நிலவியடி யாரிட்ட நேருறத்தரு தே

22 கட்டுமந்த்ர வாதிகளை மடித்து நெஞ்சிற்
கள்ளப்பசா சங்களைப் பற்றிப் பிடித் து
வெட்டியெறி கண்டர கோடாலி தொண்டர்
மிகைகோடி யேனு மெண்ணுத குணசா லி

23 கவினவர்ம் பரியில் வருமழகன் இந்தக்
கலிகால வரதனேயான் கலியாண ன்
அவனிபுகழ் பதினெட்டாம் படியான் வாய்மை
யணுவும் வழுவார் தங்கள் உள்ளமே குடியா ன்

24 வலுக்காரன் மிக்க புகழாளன் சோலை
மலையழகனானதுரை வளர்சுக்கிர வார ம்
கொலுக்கர்ரன் கார்மேக வண்ணன் வன்னங்
குலவுமகமேரு நிகர் கோதண்டபா ணி

25 ஞானகரன் கருணையாளன் செம்பொன்
நகர்மேவு தேவேந்த்ர ராஜன்மகிழ் கோல ன்
ஈனமறு கிரீடந்தரித்து வஜ்ஜிர
மெலவதத்தழைத்த முத்துத்து ராய்பூட் டி

26 தங்கக்கடுக்கன் காதிட்டு நிலவு
தருமுருகுமேற் காதிலே தொங்கவிட் டு
செங்கைவளை கணையாளி சூட்டி மிகு
சிங்காரமான பொற்சங்கிலி கைமாட் டி

27 சாலுவை சொலிக்கமேற் போட்டு வாசச்
சந்தனங்கத்தூரி சவ்வாது பூசி
ஏலுமருமுல்லை யிருவாச்சி வைத்
தேதொட்டமாலை பொன்மாலை யோடணிந் து

28 சூலதண்டாயுதங் கத்தி சுரிகை
தோமரம் வளரி சமுதாடு குத்தீட் டி
சீலமுடனே பூதப்பேய்கள் சுமந்து
சென்றேவல்யா தெனக்கேட்டுமு னடக் க

29 முரசுதவில் பேரிகை மத்தளம் [illegible] காம்பு
மொந்தையா குளிதாளை தம்பட்ட [illegible] ம்
அரியதம்புரு வீணை பிட்டில் தேவர்
அமுது கயப்பவே பேசுகிழா நட் டு

30 இன்னும் பலவாத்திய முழங்க கோடி
யிடசகியம் குடைபீலிக்குஞ் சந்துலங் க
மன்னு தீவர்த்தி பகல்வர்த்தி பல்ல
வர்ண்ணங் கொளுதீப வர்க்கமதிலங் க

31 விண்வாண வேடிக்கை மிஞ்ச அதிரு
வேட்டொலி யினுலாகன் மெய்பதறியஞ் ச
எண்மான மிக்க வடியார்கள் கோடி
யினுமேலும் வந்துவந்தே கூடிப்பா ட

32 ஈடிவன் பவனிக்கில் லென்ன மாக்க
ளெங்குமின்றே வாயினிப் புறப்பன் ன
ஆடன்வாம்பரி மீதிலேறி யெம்
மையனுங் கருப்பண்ணர் சந்தோ_மீ றி

33 பதினெட்டாம் படித்துறையன் வருகும் பவனி
பார்க்கவாராய் பார்த்துவேண்ட நலம்வருகு ம்
குதியிட்ட வாம்பரி மேலின்று வருகுங்
கோலத்தை தரிசிப்பா யென்னோடு நின் று

34 பத்திவரும் புத்திவருஞ் சித்தி பலவும்
பற்றிவரும் மேலெய்துங் கிட்டரியமூத் தி
நந்திவருவாள் பங்கயத்து வாழும
நங்கை கடலாடையாச் சுற்றுமுலகத் து

35 கலிகவலை பிணிகள் வராது துட்டக்
கரடிபுலி யானை கோபித்து நேரா து
மலிபகைவர் வழிவரு துன்பில்லை கிட்ட
வருகாது மந்த்ரவாதிகள் செய்யுந்தொல் லை

36 எண்ணியன வெல்லாங் கைகூடும் பகைவர்
ஏவவருபூதங்க ளேக்காம லோடு ம்
அண்ணிய னெருங்கிளை கொண்டாடும் படிபொன்
அம்பிளைச் செல்வந்தேவி திருவருட் கூடு ம்

37 ஆதலாற் றெரிந்ததுக் கொள்வாய் எம்மை
யாட்கொண்டு காத்தருள் வாயென்று விள்வா ய்
மாதேவனு லையப்பெருமை பார்க்க
வருகுவாய் என்பின்னே மாற்றேறுபொன் னே

38 கத்தனுயர் பரியேறு பெருமான் பெரிய
கருப்பண்ணர் சந்நிதியிலே பேசற்கரி ய
முத்துக்கருப்பண ஸ்வாமி முனியன்
முன்னோடி சோணைக்கருப்பண சா மி
வித்துவர்கள் புகழ்வீர பத்ர சாமி
மெய்ச்சமயன் அரசுமகன் வீரமிகு லாடன்
போராடு மந்திர குடோரி யான
பொன்னழகி மனதுமகிழ் புதுவைக்கருப்ப ன்

பேரானகால வயிரவனும் முத்துப்
பேச்சிராக் காச்சியோடும் வடபத்திரகா ளி

39 ஏயதெய்வங்க ளொருகும்பாய் கூடி
யிருக்குமற்றேனைய தெய்வங்கள் சீர்பெருக் ௭க
ஆயனுங் கருப்பையனேரா யிருக்கும்
அம்பொருலான கொலுமண்டபத்தைப்பார ய்

40 வண்டப்பசாசைப் பிடித்துக் கால
வயிரவா சாட்டை கொடுமாட்டு மாட்டென் று
தன்னை விதிப்பதொரு பக்கம் ஆணி
தலைமீதடித்த விசட்டிடுவ தொருபக்க ம்

41 பேர்கொண்ட குடிகளொரு பக்கம் நின்று
பிள்ளைவரம் வேண்டுகின்ற பேர்களொருபக்க ம்
சீர்கொண்ட கேள்வியொரு பக்கம் ஆனை
சிங்காரம் பாரடிபொன் மங்காதமயி லே

42 புளகமிக் கேறுமனமித்ரன் ஐயன்
பூஜைபுரி சேவக வேளானருளுபுத்ர ன்
அழகினுயர் பரமவேளான் மேல் நம
தையன் கருப்பண்ணர் ஆவேசமா கி

43 பாங்கான பூப்பந்த ருள்ளே யிட்ட
பரங்கி நாற்காலிமேற் பண்புடனிருந் து
ஆங்காரமொடு தெண்டெடுத்து சக்கி
ராயுதமுத்தலைச் சூலமதெடுத் து

44 ஏரான பாதகுற டேறி ஐயன்
இருதயத் தெண்ணரிய சந்தோஷமீ றி
சீரான மணிமகுட மாதி யாகச்
செப்பரிய பொற்பணிகள் மெய்ப்புட னணிந் து

45 தண்டனை விதிப்பதொரு விளையாடு மகிமையினைப்
[பாராய் ஐயன்
மேலன்புகொண்டு கும்பிட்டுவர நேரா ய்
விளையாடு செங்கைமடமானே கிருபை
வைத்து வேண்டியன வெல்லாந் தருகுவா னே

46 மண்டலிகர் கப்பமிகு வரதன் முத்து
வடுக நாதேந்த்ர துரைமகிழு மருதேந்த்ர ன்.
அண்டர் வானறருவனையகையான் பணியும்
ஆண்டவன்றிருவடியை யனுதினமுமறவா ய்

47 பெரிசைநகர் வளர்குமார ஸாமி பெற்ற
பிரபலன்சிவபரங்கிரி யென்னும் பேரா ன்
அரிவைர்கள் மயல்கொளும் வின் மாரன் கங்கை
யாதிபன் துதியை மனதன்போடு மேற்றி

48 வந்தவல்பிணி கடனைத்தீர்த்து நல்ல
மார்க்கண்டன் போலவே வாழ்நாளுங் கொடுத்து
சந்ததிகண் மிக்கக்கொடுத்து கனக
தண்டிகைபலாக்கோடு சௌபாக்யமீந் து

49 நெடுநாளு நமது குடியென்றே நாளும்
நினைந்தாளும் பெருமானை நீ நின்று பணிவா ய்
வடிவனைய கண்மானே வேட்பாய் எந்தன்
வார்த்தைதனையன்போடு நீ நின்றுகேட்பா ய்

50 பொன்மங்கை குடிகொண்ட புயத்தான் மிக்க
புத்திமான் வினைநன்று புரிகுண நயத்தா ன்
தென்மங்கைவளர் சேதுராஜன் வாணர்
செந்தமிழ் தனக்குதவு சேவகன்பால ன்

51 காராளர் குலதிலக னன மிக்க
கண்ணியன் எண்ணிலுயர் கனயூக யோக ன்
ஆராயு நாவலர் சகாயன் மிக்க
அழகுபின்ளைக்கருளும் ஐயனடி தொழுவா ய்

52 மைந்தேறுதிரு விளந்தூரில் நாளும்
வாழிந்த் ரகுலயோரு வரத நீதியூக ர்
நந்தாத செல்வந் தழைக்க ப்பெரிய
நகரம்பலங்கள் பொன்மாதொடும் விளங்கீ

53 மந்தரமலைக் கொத்த தோளான் முன்னம்
மதயானை நிரை சொன்ன வணிகப் ரதா பன்
ஐந்தருவையொத்த சேவகவேள் புத்ரன்
அன்பான குணவா னிடைக்கவணிகேச ன்

54 பெருமாள் வரத்தில் வருதுங்கன் கல்வி
பேண் கருப்பணனென்ப் பெயர் பெற்றவணிக னே
திருமாது வளர்வஜ்ஜிர தோளான் நீதி
சிறந்த பெரியாளுதவு சேவக சுசில ன்

55 தண்டமிழ்ப் புலவர் பரிபாலன் புண்ய
சாலி மொழிதவருத சத்யவனுகூல ன்
மண்டலிகர் மனமகிழ வந்தோன் செம்பொன்
வரைநிரை தெறிந்துரை செய்ம்மரியாதை ராமன்

56 செகமீது தெய்வநிலை பெற்றோர் நன்மை
செய்து வெகுபேரினை விளக்கவே வைத்தோ ர்
நகரகுலவணிக ரம்பலமும் எந்த
நாளுங்குபேரனிக ராகவேவிளங் க

57 ஆர்க்கும் உபகாரி விவகாரி நாளும்
அதிதியானவர் களுக்காலா விருக்ஷ ம்
பாக்யபதி ராக்க பண்டாரம் கனக
பல்லக்கினெடும் வாழ்க வருள்புரியு நாத ன்

59 சந்தனமகிபனருள் மைந்தன் இறையுங்
தவறுபுரியாதையன் குடிகொண்ட மெய்ய ன்
சிந்தைமேற் கவலை யெனலின்றி வாழ்கத்
திருவருள்புரிந்து வளர் தேவகி தேவ ன்

60 மெய்யன் கருப்பண சுவாமி மிக்க
மேலோனைக்கும்பிட்டு வேண்டுமடியார்க் கு
செய்யபிணிக் குன்மவலி குட்டம் கெட்ட
செவ்வண்டுகடி நோய் சிரங்கரையா ப்பு

61 தலைவலி வயிற்றுவலி பொறுமல் காயல்
சன்னிகாசங் கோளையிருமல் கண்வலியு ம்
மலைவானபாண்டு காமாலை அண்ட
வாதம் வாதக்கடுப்புச் சோகை கு லை

62 பல்விதமதான வெம்பிணிகள் வைக்கப்
பட்டவஞ்சனைபில்லி சூனியங்ககணை று
வல்வினைக்கிரகங்க ளெல்லாம் நமது
மாதவன் கருப்பண்ணரடியினுக்கடியா ர்